# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 406/2012 உடன் இணைந்த 53/2010

பெயர் : நடேசன் ஜம்புலிங்கம் நாள் : 20.12.2022

வா.சா.1 – 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – நடேசன் ஜம்புலிங்கம் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் தற்போது அமெரிக்கா குடிமகன் என்று சொன்னால், சரியல்ல. இரட்டை குடியுரிமை வைத்துள்ளேன். நான் அமெரிக்காவின் குடிமகனாகவும் உள்ளேன். இந்தியா குடிமகனாகவும் உள்ளேன். நான் கடந்த 2021ம் ஆண்டிலிருந்து வெளிநாட்டுவாழ் இந்தியராக உள்ளேன். நான் கனடாவிற்கு கடந்த 1982ம் ஆண்டு சென்றேன். நான் கனடா குடியுரிமையும் பெற்றுள்ளேன் என்றால், சரிதான். நான் கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு கடந்த 1991ம் ஆண்டு குடியேறினேன். கடந்த 1991ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். நான் 1991ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவின் Green Card Holder ஆவேன். நான் எனது பெயரில் இந்தியா அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட ஆதார் கார்டு பெற்றுள்ளேன். எந்த ஆண்டு ஆதார் கார்டு பெற்றேன் என்றால், நான் எந்த ஆண்டில் ஆதார் கார்டு பெற்றேன் என்று தற்போது ஞாபகமில்லை. எந்த வருடம் ஆதார் கார்டு சட்டம் கொண்டுவரப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால், எந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது என்ற விபரம் குறிப்பாக தெரியாது. நான் சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் ஆதார் கார்டு பெற்றேன். நான் 12.03.2018ல் சுரேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் எனது ஆதார் கார்டு விபரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

2) 2016ம் ஆண்டிற்கு பின்னிட்டு எப்பொதெல்லாம் இந்தியாவிற்கு வந்தேன் என்ற விபரம் தெரியுமா என்றால், ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவிற்கு வந்து செல்வேன். நான் எனது ஆதார் கார்டை சங்ககிரியில்தான் விண்ணப்பித்தேன். நான் எனது ஆதார் அட்டையை 2018க்கு முன்பாகவே வாங்கிவிட்டேன் என்றால், சரிதான். நான் 2016ம் ஆண்டு ஆதார் கார்டு சட்டத்திற்கு பின்பாகவும், நான் எழுதிக்கொடுத் பொது அதிகார பத்திர தேதிக்கு முன்பாகவும் எனது ஆதார் அட்டையை பெற்றேன் என்றால், சரிதான். 2016ம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்த பிறகு எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை இந்தியாவில் இருந்தேன் என்று கூறமுடியுமா என்றால், தேதி சரியாக ஞாபகமில்லை. 2017ம் ஆண்டில் எந்த தேதியிலிருந்து எவ்வளவு நாட்கள் இந்தியாவில் இருந்தேன் என்ற

விபரத்தை கூறமுடியுமா என்றால், என்னுடைய பழைய கடவுச்சீட்டை பார்த்தால்தான் கூறமுடியும். அதேபோல் 2018ம் ஆண்டில் எந்த தேதியிலிருந்து எவ்வளவு நாட்கள் இந்தியாவில் இருந்தேன் என்ற விபரத்தை கூறமுடியுமா என்றால், என்னுடைய பழைய கடவுச்சீட்டை பார்த்தால்தான் கூறமுடியும். நான் வைத்துள்ளது அமெரிக்கா வழங்கியது என்றால், எனக்கு முதன் முறையாக 1997ம் ஆண்டு 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது. அதன்படி நான் 2007ம் ஆண்டு எனது கடவுச்சீட்டை புதுப்பித்தேன், அதன்பிறகு 2017ம் ஆண்டு எனது கடவுச்சீட்டு புதுப்பிக்கப்பட்டது, தற்போது அந்த கடவுச்சீட்டு 2027ம் ஆண்டு வரை செல்லுபடியாகும். நான் வேலை செய்யும் நிறுவனத்தில் ஒவ்வொரு ஆண்டும் 20 நாட்கள் விடுப்பு எடுத்து கொள்ளலாம். நான் தேவைக்கேற்ப எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் விடுப்பு எடுத்து கொள்ளலாம். நான் 2016ம் ஆண்டு சராசரியாக 1 மாத காலம் விடுப்பு எடுத்துக் கொண்டேன். 2017ம் ஆண்டும் சராசரியாக 30 நாட்கள் விடுப்பு எடுத்திருப்பேன். அதேபோல் 2017ம் ஆண்டு சராசரியாக 30 முதல் 34 நாட்கள் விடுப்பு எடுத்திருப்பேன்.

3) நான் இந்த வருடம் கடந்த நவம்பர் 25ம் தேதி முதல் டிசம்பர் 25ம் தேதி வரை விடுப்பு எடுத்துள்ளேன். ஆதார் அட்டை சட்டப்படி ஒருவர் இந்தியாவில் குறைந்தபட்சம் 180 நாட்கள் குடியிருந்தால் மட்டுமே ஆதார் அட்டை தரமுடியும் என்று உள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் இந்தியாவில் தொடர்ந்து 182 நாட்கள் தங்காமல் மோசடியாக ஆதார் அட்டை பெற்றுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நான் ஆதார் கார்டு வாங்குவதற்காக இந்தியாவில் ஒரு விலாசத்தில் தங்கியுள்ளேன் என்பதை அளித்திருக்கவேண்டும் என்றால், சரிதான். நான் எனது ஆதார் அட்டை பெறுவதற்கு மாரிமுத்தான்காடு. சங்ககிரி என்ற விலாசத்தை கொடுத்துள்ளேன். நான் ஆதார் கார்டு பெற விண்ணப்பித்தபோது என்னென்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால், அந்த ஆவணங்கள் பற்றி தற்போது தெரியவில்லை. நான் வழக்கிற்கான விபரத்தை என் வழக்கறிஞரிடம் நான்தான் கூறினேன். இந்த வழக்குடன் இணைந்து அசல் வழக்கு 53/2010 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது தெரியும். நான் அசல் வழக்கு 53/2010ல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அதேபோல் அசல் வழக்கு 406/2012ல் பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும்.

4) நான் அசல் வழக்கு 53/2010ல் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன், அதனுடைய முழு விபரம் தற்போது ஞாபகமில்லை. அசல் வழக்கு எண் 406/2012 வழக்கில் ராமசாமி என்பவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால்,

சேர்க்கவில்லை, ஏனென்றால் அவர் இறந்துவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் முதல் பிரதிவாதியாக ராமசாமி என்பவரை கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சியம் பொய்யானது என்றாலும், எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும், சரியல்ல. இந்த வழக்கை எனக்காக நடத்துகிறேனா அல்லது எனது பொது அதிகார முகவர் சுரேஷ்-க்காக நடத்துகிறேனா என்றால், இந்த வழக்கை எனக்காகத்தான் நடத்துகிறேன். நான் முதன்மை சாட்சியத்தில் சுரேஷ் என்பவருக்காகத்தான் நான் சாட்சியம் அளிப்பதாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்காகவும் சுரேஷ்-க்காகவும் சாட்சியம் அளிப்பதாக கூறியுள்ளேன். நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனக்கு சொந்தமான 5100 சதுரடியில் உள்ள 500 சதுரடி கொண்ட வீடு மற்றும் ஆழ்துளை கிணறு, தென்னை மரங்கள் எனக்கு உரிமையானது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கான புதிய சர்வே எண் 263/8 பழைய சர்வே எண் 263/2A7 ஆகும்.

5) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கை ராமசாமிக்கு எதிராக தாக்கல் செய்து அது சில திருத்தங்களுக்காக திருப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் அசல் வழக்கு எண் 406/2012 ஐ கடந்த 21.12.2012 ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். வழக்கு தாக்கல் செய்தவுடனேயே வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 17.03.2010 ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை இந்த வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளேனா என்றால், ராமசாமி என்பவர் இறந்துவிட்டதால் 17.03.2010 ல் தாக்கல் செய்த வழக்குரையானது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நான் 17.03.2010 ல் தாக்கல் செய்து வழக்குரையிலும் எனது சொத்து எனக்கு வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குரையிலும் அசல் வழக்கு எண் 406/2012 வழக்குரையில் கூறியுள்ள பரிகாரங்களை கேட்டுதான் தாக்கல் செய்தேன். 17.03.2010 ல் தாக்கல் செய்து வழக்குரையில் யார் யாரை தரப்பினர்களாக சேர்த்தேன் என்றால், எனது குடும்ப உறுப்பினர்கள்மீது தாக்கல் செய்தேன். ராமசாமியின் வாரிசுகள்மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால், அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. 17.03.2010 ல் திருப்பப்பட்ட வழக்குரை தற்போது என்னிடம்தான் உள்ளது என்று சொன்னால், அந்த ஆவணம் என்னிடம் இல்லை. அசல் வழக்கு எண் 53/2010 என்ற வழக்கை எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு ஞாபகமில்லை. அசல் வழக்கு எண் 53/2010 என்ற வழக்கு தாக்கல் செய்த பிறகு 17.03.2010 வழக்குரையை தாக்கல் செய்தேனா என்றால், அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை.

6) நான் 17.03.2010 ல் எந்த வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு வழக்குரை தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. ராமசாமி இறந்த பிறகு யார் யார் சமாதானம் செய்தார்கள் என்றால், பூமலை, அண்ணாமலை, மற்றொரு பூமலை ஆகியோர்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வீட்டிற்கு சென்று சமாதானம் பேசினோம். பூமலை மற்றும் அண்ணாமலை ஆகியோர்களுக்கு முதலில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால், சரிதான். தற்போது பூமலை இறந்துவிட்டார் என்றால், சரிதான். அண்ணாமலை வாகன விபத்தில் காயம்பட்டு வீட்டில் இருந்து வருகிறார் என்றால், சரிதான். மற்றொரு பூமலை எனது பெரியப்பா வரதப்பனின் மகன் ஆவார். வரதப்பன் மகன் பூமலையை ஒரு சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால், இல்லை. நான் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று சமாதானம் பேசியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. பூமலை, அண்ணாமலைக்கு எதிராக அசல் வழக்கு எண் 53/2010 மற்றும் 66/2010 என்ற வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாக முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேன். நான் வழக்குரையில் ராமசாமி என்பவர் அசல் வழக்கு எண் 66/2010 என்ற வழக்கை என்மீது தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன்.

7) நான் வழக்குரையில் அவ்வாறு கூறவில்லையென்றாலும், பொய்யாக அசல் வழக்கு எண் 66/2010 என்ற வழக்கை என்மீது ராமசாமி என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் ஜம்புலிங்கத்தை பொய்யாக ஒரு உயில் பத்திரம் எனது 2 வது அண்ணன் மகன் மாதேஸ் என்பவர்மீது இறந்துபோன 1 ம் பிரதிவாதி எழுதி வைத்த விபரம் தெரிய வந்தபின், அது செல்லத்தக்கது அல்ல என்று நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 66/2010 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் அந்த உயில் பத்திரம் செல்லாது என தீர்ப்பாகியுள்ளது என்ற விபரத்தினை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. வழக்குரையில் கூறப்படாத விபரங்களுக்கு எதிராக நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் 2010 ம் ஆண்டில் சுமார் 7 ல் இருந்து 10 நாட்கள் வரை வழக்கு சொத்தில் தங்கியிருந்தேன். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்திலும் எனது விலாசமாக மாரிமுத்தான்காடு, தேவண்ணகவுண்டனூர் கிராமம், சங்ககிரி என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் வழக்கு சொத்தில் தங்கியிருந்தால் அதற்கான முகவரியைதான் கொடுத்திருப்பேன் என்றாலும், நான் ஒரு போதும் வழக்கு சொத்தில் தங்கவில்லை என்று சொன்னாலும், வழக்கு சொத்தின் முகவரியை கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல.

முதல் விசாரணையில் கூறியதுபோல் கடந்த 18.2.2010 ம் தேதி நான் வழக்கு சொத்தில் நுழைய முற்பட்டபோது 1 ம் பிரதிவாதி ராமசாமி உள்ளே நுழையவிடாமல் தடுத்தார் என்ற விபரத்தினை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. நான் முதன்மை சாட்சியத்தில் 11 வது பத்தில் கூறியுள்ள விபரங்களை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. அசல் வழக்கு எண் 53/2010 ல் பிரதிவாதி ராமசாமி தாக்கல் செய்த மனுக்கள் குறித்த விபரம் தெரியுமா என்றால், தெரியும்.

8) அசல் வழக்கு எண் 406/2012 ல் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் அசல் வழக்கு எண் 53/2010 ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அதில் அவர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்கள் என்றால், சரிதான். நான் முதன்மை சாட்சிய்ததில் கூறியுள்ள வழக்குமூலங்கள் எதுவும் எதுவும், வழக்குரையில் கூறவில்லையென்றால், சரிதான். சரியான வழக்குமூலங்கள் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. நான் வழக்கு சொத்தை கடந்த 1992 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிரையம் பெற்றேன். நான் வழக்கு சொத்தை கிரையம் பெறும்போது அமெரிக்காவில் உள்ள Detroit-ல் குடியிருந்தேன். நான் கிரையம் பெற்ற தேதியிலேயே எனது சகோதரர் இறந்துபோன ராமசாமியும் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றார் என்றால், சரிதான். வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்காக எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால், என்னுடைய அண்ணனிடம் கொடுத்தேன், அது எவ்வளவு தொகை என்று தற்போது ஞாபகமில்லை. நான் என்னுடைய நண்பர்கள்மூலம் எனது சகோதரிடம் பணத்தை கொடுத்தேன். நண்பரிடம் பணம் கொடுத்தற்கான பண பரிமாற்றம் எவ்வாறு நடந்தது என்றால், எனது நண்பர்களிடம் டாலராக கொடுத்து, அவர்கள் அதற்கு பண பரிமாற்றம் செய்து கொடுத்தார்கள். பண பரிமாற்றத்தை அமெரிக்கா அரசாங்கத்தின் மூலமாகவும், இந்தியா அரசாங்கத்தின் மூலமாகவும் செய்யவில்லை என்று சொன்னால், அதற்கான தேவையில்லை. அதனால் செய்யவில்லை. நான் சட்டத்திற்கு புறம்பாக பண பரிவர்த்தனை செய்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் எனது சகோதரரான ராமசாமி என்பவரிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும், பணம் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் நண்பர்கள் மூலமாக பணம் கொடுக்கப்பட்டது என்பதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில், எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்குரையில் கூறியுள்ள வழக்குமூலங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால், சரியல்ல.

9) அசல் வழக்கு 53/2010ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள விபரங்களை ஒத்துக்கொண்டுதான் ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் கிரையம் பெற்ற தேதியில்தான் எனது சகோதரர் ராமசாமி மற்றும் நடராஜன் ஆகியோர்கள் கிரையம் பெற்றார்கள் என்றால், சரிதான். வழக்கு சொத்திலிருந்து நடராஜன் கிரையம் பெற்ற சொத்தானது தள்ளியுள்ளது என்றால், சரிதான். நான் வழக்கு சொத்தை கடந்த 2010ம் ஆண்டில் பார்வையிட்டேன். தற்போது நான் பார்வையிட்டேன். முதன்மை சாட்சியத்தில் 6வது பத்தியில் கூறியுள்ளபடி கட்டியுள்ள வீடு எத்தனை அடி அகலம், எத்தனை அடி நீளம் கொண்டது என்று சொன்னால், சுமார் 1000 சதுரடி பரப்பளவு கொண்டது, அதில் எனது சகோதரர் ராமசாமிக்கு வடக்குபுறமாக 500 சதுரடியில், தெற்குபுறமாக 500 சதுரடியில் எனக்கும் வீடுகள் உள்ளது. 1000 சதுரடியில் உள்ள வீடு இரண்டாக பிரிக்கப்பட்டு உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். 10200 சதுரடியில் உள்ள நிலத்தில் நடுப்பகுதியில் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். வீட்டிற்கு கிழக்குபுறம் ஒரு கதவும், மையப்குதியில் ஒரு கதவும், மேற்குபுறம் ஒரு கதவும் உள்ளது என்றால், சரிதான். நடுப்பகுதியில் உள்ள வாசலின் வழியாகத்தான் எனது சகோதரர் அவருடைய சமையலறை மற்றும் மற்றொரு அறைக்கு செல்வார் என்றால், சரிதான். நடுவில் உள்ள கதவிற்கு நேர் எதிரே தென்புறமாக ஒரு கதவு உள்ளது என்றால், சரிதான். வடபுறமாக செல்லும் வழியும், தென்புறமாக செல்லும் வழியும் பொது இடமாக உள்ளது என்றால், சரிதான். பொது இடம் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் கூறும் பொது இடத்திற்கு மேற்குபுறம் இரண்டு அறைகள் உள்ளது என்றால், சரிதான். அந்த அறைகளுக்கு கிழக்குபுறமாக சமையலறை உள்ளது என்றால், சரிதான். என் நிலத்திற்கும் இறந்துபோன ராமசாமி நிலத்திற்கும் இடையே முட்டு கற்கள் போட்டு அத்து காண்பித்து இரு நிலங்களுக்கும் மையமாக உள்ள பகுதியை இருவருக்கும் பொதுவான பகுதியாக கொண்டு அதில் பொது சுவர் வைத்து வடக்குபக்கம் இறந்துபோன 1ம் பிரதிவாதியும், தெற்குபக்கம் எனக்கும் தனித்தனியாக வீடு கட்டி அனுபவித்து வருவதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், பொது சுவர் எந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்றால், பொதுவாக கட்டப்பட்டுள்ள சுவரானது கிழக்கு பக்கத்திலும், இடையில் பொது அறையும், அதற்கு அடுத்தாற்போல் மேற்கு பகுதியிலும் உள்ளது. வடக்குபக்கம் ராமசாமியும்,

தெற்குபுறம் நானும் வீடுகட்டி அனுபவித்து வருவதாக கூறியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி உணவு இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

வா.சா.ஆ.3 ஆவணம் 02.02.2010 ல் செலுத்திய வரிக்குண்டானது என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் காலிமனை நிலத்திற்கு வரி செலுத்தியதாக கூறப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 263/2A7 ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வீடுகள் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண் 263/8 என்பது குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண் 263/2A7 என்பதற்கு பட்டா என்றால், சரிதான். சங்ககிரி கிராம பட்டா எண் 1703 க்கான சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.2 ஆவணம் மனைவரி தோராயப்பட்டா என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்து பட்டா நிலம் என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்டு பெறப்பட்ட ஆவணம் என்று சொன்னால், சரியல்ல. பொய்யாக ஆவணம் தயாரித்ததால்தான் வா.சா.ஆ.2 ஆவணப்படி சர்வே எண் 363/2A7 க்கு போடப்பட்டது என்றாலும், சர்வே எண் 263/8 க்கு போடப்படவில்லை என்று சொன்னாலும், சரியல்ல. வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு எண் 53/2010 ல் உள்ள வழக்கு சொத்திற்கு ஒரே வீட்டு வரி விதிப்பு எண் 1-1-5G என்று வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், எனது சகோதரர் அவரது வீட்டிற்கு மட்டும் வரி கட்டிக்கொண்டார். நான் அப்போது எனது வீட்டிற்கான வரி செலுத்தவில்லை. எனது சகோதரர் மட்டும் அவருக்கு உரிமையான வீட்டிற்கு வரி விதிப்பு பெற்றுவிட்டார் என்பதை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. இன்றைய தேதி வரையில் அசல் வழக்கு எண் 53/2010 ல் வழக்கினை வீட்டிற்கான மின் இணைப்பு ராமசாமி பெயரில்தான் உள்ளது என்றாலும், மின் இணைப்பு கட்டணத்தை அவருடைய வாரிசுகள்தான் கட்டி வருகிறார்கள் என்றால், சரியல்ல. அவருக்கு சொந்தமான வீட்டிற்கு அவர் மின்சார கட்டணம் செலுத்துகிறார். எனக்கு சொந்தமான வீட்டிற்கு நான் மின்சார கட்டணம் செலுத்தி வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வரி விதிப்போ அல்லது மின் இணைப்பு இல்லாத காரணத்தினால் நான் வரி கட்டி வருவதாகவும், மின்சார கட்டணம் செலுத்துவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால், சரியல்ல. ஆழ்துளை கிணறு, வீடு கட்டியதற்கு பின்புதான் போடப்பட்டது. நானே கூட்டு பங்குதாரராக இருந்து ஆழ்துளை கிணறு பணியை செய்து வந்தோம்.

10) ஆழ்துளை கிணறு தோன்றும் கிணறு தொழில் செய்வது வந்தோம் என்பதற்கு எவ்வித ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். ஆழ்துளை கிணறு தோன்றும் பணியை செய்து வந்தோம் என்றும், அதில் நானும் ஒரு பங்குதாரர் என்றும் வழக்குரையில் கூறியுள்ளேன் என்று சொன்னால், தெரியாது. அசல் வழக்கு எண் 53/2010 ல் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்தில் 2 வீடுகள் இல்லையென்றாலும், நான் வழக்கிற்காக இரண்டு வீடுகள் உள்ளதாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், சரியல்ல. நான் கூறும் ஒரு ஆழ்துளை கிணறு வீட்டின் தென்புறமாக உள்ளது என்று சொன்னால், என்னுடைய நிலத்தில் உள்ளது. ஆழ்துளை கிணறு அமைக்க எந்த வருடம் பணம் அளித்தேன் என்றால், நான் என்னுடைய சகோதரதரிடம் பணம் கொடுத்தேன், அது எப்போது என்று ஞாபகமில்லை. நான் ஆழ்துளை கிணறு அமைக்க பணம் கொடுத்தேன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஆழ்துளை கிணறானது ராமசாமியால் போடப்பட்டது என்று சொன்னால், சரியல்ல.

11) எனது தகப்பனாருக்கு என்னையும் சேர்த்து 4 மகன்கள் என்றால், சரிதான். ராமசாமிதான் மூத்த மகன் பெற்றால், சரிதான். எனது தகப்பனார் ஜம்புலிங்கம் எந்த வருமானமும் இன்றி வாழ்ந்தார் என்று சொன்னால், சரியல்ல. விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார். எனது தகப்பனாருக்கு சுமார் 10 ஏக்கர் அளவில் தோட்டம் இருந்தது. எனது தகப்பனார் விவசாயத்தின் முலம எவ்வளவு பணம் சம்பாதித்தார் என்று எனக்கு தெரியாது. குடும்பத்தினை பராமரிக்கும் வகையில் சம்பாதித்தார். என்னுடைய சகோதரர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது சகோதரர் 12 வயது முதலே கூலி வேலைக்கு சென்று சம்பாதித்தார் என்று சொன்னால், சரியல்ல. எனது தகப்பனார் விவசாய பணிகளில் கலந்து கொள்வார். எனது அம்மா விவசாய வேலைகளுக்கு சென்று வருவார். எனது சகோதரர்கள் தறி வேலைக்கு சென்று சம்பாதிப்பார்கள். எனது சகோதரர்தான் குடும்பத்தை காப்பாற்றினார் என்றாலும், எனது தந்தையோ, தாயோ அல்லது மற்ற சகோதரர்களோ எதுவும் சம்பாதிக்கவில்லை என்று சொன்னாலும், சரியல்ல. என்னுடைய சகோதரர் ராமசாமிதான் என்னை பிடிக்க வைத்து, திருமணம் செய்து வைத்து, அனைத்து செலவுகளையும் செய்து வந்தார் என்றால், எனது தாய் தந்தை மற்றும் மற்ற சகோதரர்களும் சேர்ந்துதான் என்னை படிக்க வைத்து திருமணமும் செய்து வைத்தார்கள். எனது சகோதரர் ராமசாமிதான் நான் கனடாவிற்கு செல்லும்போது அவரது மனைவியின் நகைகளை விற்று

செலவு செய்தார் என்று சொன்னால், சரியல்ல. எனது மற்ற சகோதரர்கள் சேர்ந்துதான் என்னை கனடாவிற்கு அனுப்பி வைத்தார்கள்.

12) வழக்கு சொத்துக்களில் உள்ள நிலங்கள் விற்பனைக்கு வந்த விபரத்தினை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால், எனது சகோதரர் சொன்னார், அதன்படி நான் பணம் அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துக்களை கிரையம் பெறும்போது அதற்கான தொகையை எனது சகோதரர்தான் கொடுத்தார். அந்த கிரைய தொகைக்காக நானும் எனது சகோதரிடம் பணம் கொடுத்திருந்தேன். என்னுடைய பணத்தையும் சேர்த்துதான் கிரையம் பெற்றார். ராமசாமிதான் அவருடைய சீட்டுபணம் ரூ.1 லட்சம் மற்றும் அவருடைய மனைவி நகைகளை விற்றும் வழக்கு சொத்துக்களை நிலம் பெற்றார் என்றாலும், பெயரளவில் மட்டுமே என்மீது ஒரு கிரையம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. கிரைய ஆவணம் என் பெயரில் பெயரளவில் ஏற்படுத்தியதால்தான் ராமசாமி வழக்கு சொத்தில் நடுப்பகுதியில் வீடு கட்டியதை நான் ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல.எனது சகோதரர்மீதான நம்பிக்கையின் பேரில் அவரிடம் வழக்கு சொத்துக்களை வாங்க பணம் கொடுத்தேன். பின்பு இருவரும் கூட்டு குடும்பமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் வீட்டை கட்டினோம். 1992 ம் ஆண்டிலிருந்தே பிரதிவாதிகள்தான் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால், நான் முகவரியில் இல்லை என்று சொன்னாலும், சரியல்ல. நான் நிலத்தை கிரையம் பெற்றபிறகு எனது சகோதரரை ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அதனை பராமரிக்கும் பொறுப்பை மட்டுமே அவரிடம் கொடுத்திருந்தேன். எனது சகோதரர் எனது பெயரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில்தான் பெயரளவிலான ஒரு கிரைய பத்திரத்தை ஏற்படுத்தினார் என்றாலும், அந்த கிரைய பத்திரத்தின்படி நான் வழக்கு சொத்தில் எவ்வித உரிமையோ, அனுபவமோ அடையவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு 2 நுழைவு வாயில் உள்ளது என்று கூறுவது பொய் என்று சொன்னால், சரியல்ல. இன்று தேதி வரையிலும் ஒரு வாசலை அடைத்ததற்கான அடையாளங்கள் உள்ளது. எனக்கு உண்டான பாதையை அடைத்துவிட்டார்கள் என்பதற்காக புகார் ஏதேனும் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. பிரதிவாதி நிலத்தின் வழியாக எனது வீட்டிற்கு சென்று வந்தேன் கூறியுள்ளது பொய் என்று சொன்னால், சரியல்ல.

13) 04.03.2010 ல் பிரதிவாதி வழக்கு சொத்தில் செல்வதை தடுத்து பிரச்சனை செய்தார் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. தற்போது 10200 சதுரடியில் ராமசாமியின் மனைவி அழகம்மாள்தான் அனுபவம் செய்து பராமரித்து

வருகிறார் என்றால், சரியல்ல. எனக்கு சொந்தமான 5100 சதுரடி நிலத்தை பராமரித்து மட்டுமே வருகிறார். பராமரிப்பிற்காக எழுத்துமூலமாக ஏதேனும் அனுமதி கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. எனக்கு சொந்தமான ஆழ்துளை கிணற்று நீரை பிரதிவாதிகள் பயன்படுத்தி கொள்ளவும், பிரதிவாதிகளின் மின் இணைப்பை நான் பயன்படுத்தி கொள்ளவும் இரு தரப்பிலும் ஒத்துக்கொண்டோம். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றாலும், வழக்கிற்காக பிரதிவாதி பராமரிப்பு பணியை மட்டும் செய்து வருகிறேன் என்று கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான் 21.07.2012 அன்று இந்தியா வந்தேன் என்றால், சரிதான். 21.07.2012 ம் தேதி வழக்கு சொத்தில் நான் நுழைந்தபோது அழகம்மாள் தடுத்து நிறுத்தி சொத்துக்கள் அனைத்தும் விற்பதாக கூறினார் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. நான் ஒருபோதும் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றாலும், வழக்கிற்காக 21.07.2012 ம் தேதியில் வழக்கு சொத்தில் நுழைந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. பிரதிவாதிகள் யாருக்கு விற்பனை செய்ய முயற்சித்தார்கள் என்றால், பிரச்சனை ஏற்பட்டவுடன் வழக்கு சொத்தை விற்பதற்காக நிறைய வாய்ப்புகள் இருந்தது, அதனால் அவ்வாறு கூறியுள்ளேன். வழக்கு சொத்துக்கள் ராமசாமிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பிரதிவாதிகள் வழக்கு சொத்தை விற்க முயற்சி செய்தார்கள் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் ராமசாமி என்பவர்தான் ஆழ்துளை கிணறு அமைத்து, வீடு கட்டி, வரிகளை செலுத்தி அனுபவித்து வந்தார் என்றாலும், வழக்கிற்காக நான் செலவு செய்து வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்று அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் 2010 ம் ஆண்டு பார்வையிட்டபோது வழக்கு சொத்தின் வடபுறத்தில் தென்னை, கறிவேப்பிலை, எலுமிச்சை, சப்போட்டா மரங்கள் இருந்தது. தெற்குபுறத்தில் ஒரு கூரை வீடும், 3 தென்னை மரங்கள் மட்டுமே இருந்தது.

14) நான் எழுதிக்கொடுத்த அதிகார முகவர் பத்திரத்தில் மங்களூர் ஓடு போட்ட வீடு உள்ளதாகதான் கூறியுள்ளேன் என்றால், சரிதான். எனக்கு வழக்கு சொத்தை பொறுத்து எதுவும் தெரியாது என்றாலும், அதனால்தான் சாதாரண ஓட்டு வீட்டை மங்களூர் ஓடு போட்ட வீடு என்று கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தானது 10200 சதுரடி நிலமும் ராமசாமிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதால், பிரதிவாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு 53/2010 என்ற வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றாலும், நான் தாக்கல் செய்த அசல் வழக்கு 406/2012 ஐ தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும், சரியல்ல.

வழக்கு சொத்தை வாங்கும்போது அதன் மதிப்பு குறைவாக இருந்ததாலும், அதனை பின்னிட்டு மதிப்பு கூடிவிட்டதால் துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எந்த சூழ்நிலையில் சமாதானம் பேசவில்லையென்றாலும், அவ்வாறு சமாதானம் பேசியிருந்தால் யார் யார் முன்பு சமாதானம் பேசப்பட்டது என்ற விபரத்தை கூறியிருப்பேன் என்றாலும், சரியல்ல.

ஒப்பம் / நடேசன் ஜம்புலிங்கம்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.